[திருமதி. ஜெ. லோகாம்பாள்] [1992 ஏப்ரல் 1

மேற்படி சிறுகளப்பூர் உயர்நிலைப்பள்ளிக்கு அருகாமையிலுள்ள கோவில் நிலத்தை பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு உத்திரவிடும்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியை கேட்டுக்கொள்கிறேன். அந்த கோவில் நிலத்திற்குப் பதிலாக அந்த கிராம பொதுமக்கள் வேறொரு நிலத்தை ஈடாகக் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

லால்குடி அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு போதிய இடவசதி இல்லாமல் மாணவர்கள் மரத்தடியில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கு நடுவில் நெடுஞ்சாலை ரோடு இருக்கிறது. அந்த நெடுஞ்சாலை ரோடில் அதிக ஆபத்துக்கள் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிறது. 2 குழந்தைகள் கூட அடிப்பட்டு இறந்துவிட்டார்கள். ஆகவே அந்த நெடுஞ்சாலை ரோடில் வேகத் தடுப்பு அமைத்து குழந்தைகளுக்கு பாதுகாப்பு தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இதுவரை வேகத் தடுப்பு போடப்படவில்லை. உடனடியாக லால்குடி அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு அருகாமையிலுள்ள நெடுஞ்சாலையில் வேகத்தடுப்பு போட ஆவன செய்யுமாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

5. விதி 110-ன் கீழ் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை

தமிழ்நாட்டில் குடிநீர்ப்பற்றாக்குறையைப் போக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு இப்போது ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் அனைத்து மக்களுக்கும், போதிய நிரந்தரமான அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணிக்கு, தமிழக அரசு, பெருமளவில் முன்னுரிமை அளித்து வருகிறது. இதற்காக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியமும், பல திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன.

சென்னைக் குடிநீர் வாரியம் கீழ்க்கண்ட இரண்டு பெரிய திட்டங்களைச் செயல்படுத்துவதன்மூலம், இப்பிரச்சினையைத் தீர்க்க முயன்று வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

1992 ஏப்ரல் 1] [திரு. அழகு திருநாவுக்கரசு]

(அ) உலக வங்கியின் உதவியுடன் சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் ;

(ஆ) கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின்கீழ் சென்னைக்குக் குடிநீர் விநியோகிக்கும் திட்டம்.

இந்த ஆண்டு பருவமழை நல்லமுறையில் பெய்துள்ளதால், சென்னைக்கும் மற்றும் அதன் சுற்றுப்புற இடங்களுக்கும் தண்ணீர் தட்டுப்பாடு இல்லை. சென்னையைப் பொறுத்தவரையில், வில்லிவாக்கம் தொகுதியைச் சேர்ந்த கே.கே. நகரில், தண்ணீர் சரியாக வருவதில்லை என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. நீரேற்றுக் குழாய்கள் புதிதாக அமைத்துச் செயல்படுத்தப்படும்போது ஆங்காங்கு, சிறு சீரமைப்புக்கள் தேவைப்படும். அவ்வாறு, நீரேற்றுக் குழாய்கள் சீரமைக்கப்படுவதால் தற்காலிகமாகத் தடை ஏற்பட்டுள்ளது. இச்சீரமைப்புப் பணிக்குப் பின்னர், குடிநீர் வழங்குவதில் தடை எதுவும் ஏற்படாது. தமிழ்நாட்டில் நகர வளர்ச்சி அதிவேகமாக உள்ளதால் குடிநீர் தேவையும் மிக அதிகமாக உள்ளது. நகரப் பகுதிகளில் குடிநீர் திட்டப் பணிகள், கடன் மற்றும் நிதி உதவி அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றன.

பிற்பகல் 1-05

1991–92-ஆம் ஆண்டில், 12 நகரக் குடிநீர்த் திட்டங்கள் (புதியவை மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள்) முடிக்கப்பட்டுப் பொது மக்களின் பயனுக்குக் கொண்டுவரப்பட்டன.

தமிழ்நாட்டில் உள்ள 756 நகரங்களில், 466 நகரங்களுக்குக் குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 170 நகரங்களில், குடிநீர் வழங்குவதற்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. எஞ்சிய 120 நகரங்களில் உள்ள குடிநீர் மற்றும் உபயோகம் ஆகியவை ஆராயப்பட்டு வருகின்றன.

1992–93-ஆம் ஆண்டில், ரூபாய் 31.80 கோடி செலவில். 6 நகராட்சிகள் மற்றும் 11 நகரப் பேரூராட்சிகளில், குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டுப் பயனுக்குக் கொண்டு வருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். வெவ்வேறு அளவுகளில் குடிநீர்த் திட்டங்களை ஆய்வு செய்து, உருவாக்கி, நிறைவேற்றி வருகிறது. 29–2–1992-இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, தமிழக ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர் வசதி நிலை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

1. முழுமையான குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புக்கள்.		34,882
2. பகுதி அளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புக்கள்.		40,876
3. குடிநீர் வசதியற்ற குடியிருப்புக்கள்	..	22
மொத்தம்	..	75,780

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தாம் பதவியேற்றதும் பிறப்பித்த உத்தரவின்படி, குடிநீர் வசதி பெறாத 1,418 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புக்களுக்கு, 31-12-1991-க்குள் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

1991-92 ஆம் ஆண்டில், குடிநீர் வசதி இல்லாத மற்றும் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள 4,329 குடியிருப்புக்களுக்கு, ரூபாய் 65 கோடி செலவில், முழுமையான அளவில் குடிநீர் வசதி அளிக்கப்பட்டது.

1992-93 ஆம் ஆண்டில், 3,653 குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள குடியிருப்புக்களுக்கு, ரூபாய் 60.19 கோடி செலவில், குடிநீர் வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

குடிநீர் வசதி அறவே இல்லாத குடியிருப்புக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, பின்னர், குறைந்த அளவு குடிநீர் வசதி உள்ள குடியிருப்புக்களுக்கு, அவ்வப்போது நிலவும் குடிநீர் வசதிகளைக் கருத்தில் கொண்டு, திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், உலக வங்கி உதவியுடன் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் ஆகிய பெரு நகரங்களுக்குக் குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள், 75 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான குடிநீர்த் திட்டம், 740 வழியோர கிராமங்களுக்கு மொத்தக் குடிநீர் வழங்கும் பணி மற்றும் 14 நகரங்களுக்கு குறைந்த செலவில் கழிப்பறை அமைக்கும் பணிகள், ரூபாய் 321.86 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

உலக வங்கித் திட்டத்தின்கீழ், இதுநாள்வரை, 34 நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

1992–93 ஆம் ஆண்டு, ரூபாய் 132 கோடி செலவில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 132.72 கோடி.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : 132.72 கோடி செலவில் 14 நகரங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

வறட்சியின் காரணமாக, குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ள பகுதிகள் அனைத்திற்கும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

1. ஏற்கெனவே செயலாக்கத்தில் உள்ள குடிநீர்த் திட்டங்களை முறையாகச் செயல்படுத்த வேண்டும்;

2. தற்போது முன்னேற்ற நிலையில் உள்ள குடிநீர்த் திட்டங்களை துரிதப்படுத்தி விரைவாக நிறைவேற்ற வேண்டும்;

3. கை இறைப்பான்கள், விசை இறைப்பான்கள் ஆகியவற்றைப் பழுதுபார்த்துத் தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்;

4. குடிநீர்த் திட்டங்களைப் பழுதுபார்ப்பதற்குத் தேவைப்படுகிற உதிரி பாகங்களை உபரியாக வாங்கி, பழுதுபார்ப்பவரையும் தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்;

5. தேவையான இடங்களுக்கு, லாரிகள் மூலம், குடிநீர் வழங்க வேண்டும்.

வறட்சி நிவாரணத்தின்கீழ், புதிய ஆழ்குழாய்க் கிணறுகள், திறந்த வெளிக்கிணறுகள், உறைக்கிணறுகள் அமைப்பதற்கும், கிணறுகளைத் தூர்வாரி ஆழப்படுத்துவதற்கும், புதிய குழாய்கள் அமைப்பதற்கும், லாரிகள் மூலம் குடிநீர் வழங்குவதற்கும், தமிழக அரசு, ரூபாய் 6.72 கோடி அனுமதி அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளித்துப் போதுமான குடிநீர் வழங்குவதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).